**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவாரூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.உ.ரவிச்சந்திரன் என்பவரின் மகன் திரு.ர.கௌதம் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக பதவியில் பணி நியமனம் செய்தது – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை**

அரசாணை (3ப) எண்.17

நாள்: 05.04.2022
பிலவ, பங்குனி 22
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.2703/2019/அ3(வ), நாள்:14.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.9532/2021/டி2, நாள்:27.07.2021.

*****

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், திருத்துறைப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 21.01.2020 அன்று பணியிடைக்காலமான திரு.உ.ரவிச்சந்திரன் என்பவரின் மகன் திரு.ர.கௌதம் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின்

த.பி.பா.

செயல்முறையின்படி கருணை அடிப்படையில், திருவாரூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 16.12.2020 பிற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.உ.ரவிச்சந்திரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண் பருவத்தினை 21.05.2011 அன்று நிறைவு செய்துள்ளார் என்றும் அவரது வாரிசுதாரரான மகன் திரு.ர.கௌதம் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 22.06.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் தனியர் திரு.ர.கௌதம் 12.07.1992 அன்று பிறந்துள்ளார் என்றும் மேலும் தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10–ம் வகுப்பு) மார்ச் 2007 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்று ஒருங்கிணைந்த சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 27 என்றும் தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தனியர் 16.12.2020 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக பணியில் சேர்ந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 ஆக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ர.கௌதம் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–2 பதவியில் 16.12.2020 பிற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

Block Dev.Officer (V.Pt),
Thiruthuraipoondi.

த.பி..பா.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 14.03.2022-ஆம் நாளிட்ட அலுவல் சாரா குறிப்பு எண்.4174/ட்டி1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.9065/ஜி3/2022, நாள்:22.03.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருவாரூர் மாவட்டம்.

நகல்:

திரு.ர.கௌதம், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருவாரூர் மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சே. சாந்தி 06/04/2022
பிரிவு அலுவலர்